
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1033

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# இது பெரியார் மண்

ர.பிரகாசு

37

பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.



## சுயமரியாதைச் சுடரொளி ‘தோலி’ சுப்பிரமணியன்!

சுயமரியாதை இயக்கத்தின் நூற்றாண்டு இது. சுயமரியாதை இயக்க தீரர் ‘தோலி’ சுப்பிரமணியனுக்கும் இதுதான் நூற்றாண்டு. மற்றவர்களுக்குத்தான் அவர் ‘தோலி’ சுப்பிரமணியம். பெரியாருக்கு அவர் ‘தோலி தம்பி’. பெரியார் அப்படித்தான் அவரை அழைப்பார். அந்த அளவுக்கு பெரியாரோடு நெருக்கமாக இருந்த சுயமரியாதை இயக்க தீரர். திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் இருந்து 14 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சிற்றூர் தோலி. அதன் தனித்துவமான அடையாளம் சுப்பிரமணியன்.

அருகே உள்ள நீடாமங்கலத்தில் பெரியாரின் பொதுக் கூட்டத்தைக் கேட்டு, பள்ளிப் பருவத்திலேயே சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை உள்வாங்கிய சுப்பிரமணியன், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் இன்டர்மீடியட் வகுப்பில் சேர்ந்தபோதே கருப்புச்சட்டை அணிந்துவிட்டார். உடன் படித்த கே.ஏ.மதியழகன், கடலூர் இளம்வழுதி உள்ளிட்டோருடன் இணைந்து பெரியாரிய வாதியாக உருவெடுத்தார். ஆனால், குடும்பமோ சுமார் 100 ஏக்கர் நிலத்தைக் கொண்டு விவசாயம் செய்துவந்த மிராசுதார் குடும்பம்.

அன்றைய காலச்சூழலில் செல்வந்தர்கள் அனைவரும் காங்கிரஸில் இருப்பதுதான் வழக்கம். சுப்பிரமணியன் மட்டுமே நேர் முரணாக சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை சுவாசித்து, கருப்புச்சட்டை அணிந்துகொண்டார். 1945-இல் படித்து முடித்து ஊருக்குத் திரும்பியவுடன் தனது நண்பர்களான எஸ்.கல்யாணம், சிங்காரவேலு, எஸ்.சிவானந்தம், எ.ராமலிங்கம், வி.ராமலிங்கம், நெடுஞ்செழியன், எஸ்.ராமலிங்கம் ஆகியோரை இணைத்துக்கொண்டு தோலியில் திராவிடர் கழகக் கிளையை தோற்றுவித்தார். சுப்பிரமணியன் அதன் செயலாளர்.

அப்போது திராவிட மாணவர் கழகம் வீரியமாகச் செயல்பட்ட காலம். ஆசிரியர் கி.வீரமணி, புலவர் ஆறுமுகம், புலவர் குழந்தையா, தில்லை வில்லாளன் ஆகியோர் அப்போது தஞ்சை மாவட்டம், முழுக்க சுற்றுப்பயணம் செய்து திராவிட மாணவர் கழகத்தின் கூட்டங்களில் பேசி வந்தனர். 03.06.1946-இல் அவர்களை தோலிக்கு அழைத்து கூட்டம் நடத்தினார் சுப்பிரமணியன். அந்த காலகட்டத்தில் கலைஞரையும் அழைத்து கூட்டம் நடத்தினார்.

தோலியில் திராவிடர் கழகக் கிளை தொடங்கப்பட்டதன் முதலாம் ஆண்டு நிகழ்ச்சியை, 18-12-1946-இல் பெரியாரை அழைத்து வந்து சிறப்பாக நடத்தினார். அன்றைக்கு சாலை வசதி கூட இல்லாத குக்கிராமம் தோலி. அங்கிருந்து 6 கி.மீ தொலைவில் உள்ள தில்லைவிளாகத்திற்கு ரயிலில் வந்த பெரியார், மாட்டு வண்டியில் தோலிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ‘திராவிடர் கழகம் ஏன் உருவாக்கப்பட்டது’ என்று சுமார் 2 மணிநேரம் அந்த கூட்டத்தில் பேசினார் பெரியார். கொட்டும் மழையில் ஆயிரக்கணக்கானோர் நனைந்துகொண்டே அந்தக் கூட்டத்தை கவனித்தனர். பெரியாரின் பேச்சு காந்தமாய் ஊராரை ஈர்த்தது.

டெல்டா மாவட்டம் முழுக்க காணப்பட்ட பண்ணை ஆதிக்கமும், சாதி இறுக்கமும் தோலியில் அப்போதே தளர்ந்துவிட்டன. திராவிட இயக்கத்தின் சமத்துவ லட்சியத்திற்காக அவர் கொடுத்த விலையும் உழைப்பும் பெரிது. அதை வரும்வாரம் காண்போம்.

...பயணிப்போம்.



தோலியில் நடந்த கூட்டத்திற்கு சென்றபோது நான் பள்ளிச்சிறுவன். மேடைக்கு அருகிலேயே இறகுப் பந்தாட்ட கூடம் இருந்தது. விளையாடிவிட்டு அங்கேயே தூங்கிவிட்டேன். கூட்டம் நடந்துகொண்டிருந்தது. நான் பேசுவதற்கு சிறுதுநேரம் முன்புதான் எழுப்பினார்கள். உடனே ஓடிப்போய் பேசினேன். அந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர் தோலி சுப்பிரமணியன். பின்னாளில் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட திராவிடர் கழகத் தலைவராக செயல்பட்டவர். திராவிட இயக்க லட்சியங்களை அடைய உறுதியோடு பாடுபட்டவர், உள்ளூரிலும் கொள்கையை செயல்படுத்தியவர் அவர்.

-ஆசிரியர் கி.வீரமணி, தலைவர் திராவிடர் கழகம்.

## ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ போட்டிகள்!




‘நலம் காக்கும் ஸ்டாலின்’ என்ற புதிய திட்டம் இந்த ஆண்டு ஆகஸ்டு 2-ஆம் தேதி முதல் அனைத்து தரப்பு மக்களும் பயன் பெறும் வகையில், செயல்படுத்தப் பட்டு வருகிறது. அதிநவீன பரிசோதனை வாயிலாக நோய்களைக் கண்டறிந்து, உடனடியாகக் கட்டணமில்லா சிகிச்சை அளிப்பதே இதன் நோக்கம். இந்த முகாம்கள் பிப்ரவரி 2026 வரை ஓராண்டுக்கு, ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் இத்திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும், விழிப்புணர்வு ஏற்படுத்தவும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் ஊடக மய்யம் சார்பாக, 10 வகையான போட்டிகளை தமிழ்நாடு அரசு நடத்த உள்ளது.

இதில் பங்கேற்பவர்கள் ஒரு நிமிட ரீல்ஸ், உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றத்தை கட்டுரை வடிவில் ஒரு பக்கத்தில் எழுதலாம். ஆரோக்கியத்தின் திருவிழா - ஒளிப்படப் போட்டி, உண்மைக்கு உயிர் கொடு - குறும்படப் போட்டி, வரிகள் பேசட்டும்- விழிப்புணர்வு முழக்கம், அறிவோடு விளையாடு, வினாடி வினா போட்டி. பாரம்பரியமும், ஆரோக்கியமும் - சமையல் போட்டி. எண்ணங்களும், வண்ணங்களும் - ஓவியப்போட்டி, பாட்காஸ்ட் போட்டி என 10 வகையான போட்டிகளை நடத்துகிறது. போட்டியாளர்கள் தங்கள் படைப்புகளை சமர்பிக்க டிசம்பர் 5 கடைசி நாளாகும். tndiprmhnks@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு படைப்புகளை அனுப்பலாம். வாட்ஸ் அப் எண் 94980 42408-க்கு ஒரு ‘ஹாய்’ அனுப்பி லிங்கை பெற்றும் தங்கள் படைப்புகளை அனுப்பலாம்.

# பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

87

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."



## பொய்களுக்கு எதிராக புள்ளிவிவரங்களே சாட்சி!

***தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய முதலீடுகள் ஆந்திரா போன்ற பக்கத்து மாநிலங்களுக்குப் போய்விடுவதாகவும், அவற்றை ஈர்க்காமல் தி.மு.க. அரசு கோட்டை விடுவதாகவும் எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை சில பிரபல பத்திரிகைகளும் எதிரொலிக்கின்றனவே?***

ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் என்ற பொருளாதார இலக்கை நிர்ணயித்து, அதற்கேற்ப முதலீடுகளை ஈர்த்து தொழில்வளம் பெருக்கி, வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருகிறார் தமிழ்நாடு முதலமைச்சர். 2021-இல் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றது முதல் இதுவரை 1016 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமாக 11.4 இலட்சம் கோடி மதிப்பிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 34 இலட்சம் பேருக்கான வேலை வாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டவுடனேயே, மொத்த முதலீட்டையும் எந்த நிறுவனமும் கொண்டு வந்து கொட்டிவிடாது. நில எடுப்பு, அரசு நிறுவனங்கள் சார்ந்த அனுமதி, அரசாங்கம் தரும் சலுகைகள், கட்டுமானத் திற்கான கால அளவு, சோதனை உற்பத்தி எனப் பல கட்டங்களைக் கடக்க வேண்டும். அதற்கேற்ப முதலீடுகள் படிப்படியாக செய்யப்படும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் 78% அளவிற்கு (809 திட்டங்கள்) இந்தக் கட்டங்களை எட்டிவிட்டன. ஒரு சில நிறுவனங்கள் வணிக ரீதியான உற்பத்தியையும் தொடங்கிவிட்டன.

முதலீடுகள் ஒரே இடத்தில் குவியாமல், தமிழ்நாட்டில் பரவலான அளவில் பல நகரங்களிலும் முதலீடு செய்யப்பட்டு, தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டால்தான் அனைத்து பகுதி மக்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதில், திராவிட மாடல் அரசு உறுதியாக இருக்கிறது. சில நிறுவனங்கள் சென்னையைச் சுற்றியே தங்கள் நிறுவனங்களை அமைக்க நினைக்கும் போது, அதற்கான வாய்ப்பு குறைகிறது. எவ்வளவு முதலீடு என்பதை விடவும், எங்கே முதலீடு செய்யப்படுகிறது, அதனால், எந்தெந்த மக்களுக்கு வேலை கிடைக்கிறது என்பதையே முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

“இந்தியாவிலேயே தொழில் புரிந்திடுவதற்கான சிறந்த மாநிலம் (2025-29) தமிழ்நாடு’ என உலகப் புகழ்பெற்ற ‘தி எகானமிஸ்ட்’ பத்திரிகை தனது ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. வெளிப் படைத்தன்மையுடனான முதலீட்டு ஈர்ப்புக்கு ஏற்ற மாநிலம் தமிழ்நாடு என ஒன்றிய அரசின் பி.ஆர்.ஏ.பி. சாதனையாளர் விருது அளித்துள்ளது. இந்தியாவில் 46 ஆயிரத்து 899 தொழிற்சாலைகள் என அதிக எண்ணிக்கை கொண்ட மாநிலம் தமிழ்நாடு. இந்தியாவில் பணியாற்றும் பெண்களில் 43% தமிழ்நாட்டில் உள்ளனர், தமிழ்நாடு 11.9 என்ற இரட்டை இலக்க வளர்ச்சியைக் கொண்டுள்ள மாநிலம் எனச் சொல்லிக்கொள்வது முதலமைச்சரோ தி.மு.க.வினரோ அல்ல. இந்திய ஒன்றிய அரசின் துறைகள் தருகின்ற புள்ளிவிவரங்கள். அரசியல் செய்வதற்காக அறிக்கை விடாமல், தமிழ்நாட்டின் மீது உண்மையான அக்கறையுடன் செயல்படுவார்களேயானால், எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கும் அவர்களின் ஊதுகுழல் பத்திரிகைகளுக்கும், தமிழ்நாட்டுக்கு வரவேண்டிய செமிகண்டக்டர் நிறுவனங்களை, பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு வலுக்கட்டாயமாகக் கொண்டு சென்ற மோடியை நோக்கி கேள்வி கேட்கும் திராணி இருக்க வேண்டும்.

...வினா தொடரும்.

# ப்ளாஷ்பேக்



## மகனுக்கு ஆதவன் எனப் பெயர் சூட்டிய தலைவர்!



எல்.வெங்கட்

2016-ஆம் ஆண்டு, என் மகன் பிறந்த நாளின்போது தலைவரிடம் வாழ்த்து பெற தூக்கிச் சென்றிருந்தேன். அப்போதுதான், தலைவரிடம் சொல்லி பெயர் சூட்டினோம். தலைவர், கைகளில் வாங்கி ‘ஆதவன்’ எனப் பெயர் சூட்டி வாழ்த்தினார். உடன் என் தம்பி, எல்.உதயகுமார், அவரின் மனைவி பவானி, மைத்துனர் யுவராஜ் ஆகியோர் உள்ளனர். இந்தப் படம் காலகாலத்துக்கும் என் கழகப் பற்றுக்குச் சான்று, என் மகனுக்கு தலைவர் வழங்கிய அன்புப் பரிசு!

- எல்.வெங்கட்,
இலக்கிய அணி பகுதி துணை அமைப்பாளர்,
மதுரவாயல், சென்னை தெற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

# கருவூலம்

## கலைஞரை வரவேற்ற அண்ணா!

1962-ஆம் ஆண்டு அக்டோபர் 26-ஆம் தேதி, விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் சிறைசென்ற கலைஞர், திருச்சி சிறையிலிருந்து விடுதலையானார். கலைஞரை வரவேற்பதற்காக பேரறிஞர் அண்ணா சிறை வாசலில் காத்திருந்தார். சிறையில் இருந்து வெளிவந்த கலைஞர், ஏ.கே.வேலன், டி.கே.சீனிவாசன் ஆகியோரை பேரறிஞர் அண்ணா கட்டித்தழுவி வரவேற்றார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131